செய்தி வெளியீடு எண் : 503 நாள் : 09.03.2023

# செய்திவெளியீடு

தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர், மாண்புமிகு திரு. நீதிஅரசர் S.பாஸ்கரன் அவர்களின் முயற்சியால் சர்வதேச மகளிர் தின கொண்டாட்டம், தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணையத்தின் அரங்கத்தில் 08/03/2023 அன்று மாலை 04.00 மணிக்கு மாநில மனித உரிமைகள் ஆணையம் தமிழ்நாடு கொண்டாடியது. இந்த விழாவில் மாண்புமிகு திருமதி. நீதிஅரசர் R.ஹேமலதா, சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதி அவர்கள் முதன்மை விருந்தினராகவும், அம்மையார் A.அருள்மொழி, வழக்கறிஞர், மற்றும் திராவிட கழகத்தின் பிரச்சார செயலாளர், அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் மற்றும் டாக்டர்.P.K.ஸ்ரீவித்யா, பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் பதிவாளர் அவர்களும் கலந்துகொண்டார்கள்.

இந்த கொண்டாட்டத்தின் போது தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணையத்திற்கும் பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்திற்கும் இடையே கல்வி மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்புக்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இதனால் பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் மாணவர்கள் மற்றும் ஆசிரிய உறுப்பினர்ககளின் அறிவு மேம்படும் மேலும் பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் மாணவர்களின் ஆராய்ச்சி, பயிற்சி, மாணவர்களை தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணையத்தின் பயிச்சிக்காக அவ்வப்போது அனுப்புதல் மற்றும் நிபுணர்களின் வழிகாட்டுதல்கள் மூலம் ஆலோசணைகள் வழங்கப்படும்.

இந்த விழா தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர், மாண்புமிகு திரு. நீதிஅரசர் S.பாஸ்கரன் அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது. இந்த விழாவில் தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் செயலாளர் டாக்டர்.K.விஜயகார்த்திகேயன், இ.அ.ப.., அவர்கள், வரவேற்புரையும், திரு.N.முரளிதரன், பதிவாளர் / மாவட்ட நீதிபதி அவர்கள் நன்றியுரையும் வழங்கினார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in